# Reasons behind social stigmatization of the person with disabilities in Sri Lanka: A study in the Northern Province, Sri Lanka

Luxshe Hariharan[1] and Anutharsi Gabilan[2]

[1]*luxshe@soc.cmb.ac.lk*
[2]*anutharsi@unvi.jfn.ac.lk*

## Abstract

*This study has identified the reasons for social stigmatization of the people with disabilities living in Northern, Sri Lanka. The thirty-year war in Sri Lanka ended in 2009. As a result, the number of people with disabilities in the society has increased. They experience various problems and suffer negative consequences. The war has created 15% of the people with disabilities in the Northern Province of Sri Lanka. In that way, this study has been based on the Maritimepattu DS Division, Mullaitivu District, where the final battle took place. The main objective of the study is to find out the causes of social stigmatization faced by the war disabled people. Its sub-objectives include the followings: to identify the social stigmatization faced by war affected members and to make recommendations to reduce them. For this both quantitative and qualitative research methods have been used. Physically disabled people have been selected as the sampling of this research. Fourty questionnaires and ten case studies were used to collect data of this study. Data analysis has been done through MS Excel and thematic analysis method. People with disabilities face social stigmatization. Socio-cultural, economic and infrastructural, political and health reasons are behind for the social stigmatization of the war disabled in the research area. Lack of accessibility for persons with disabilities, prejudice based on religion and superstitions cause their stigma. People with disabilities are also pointed by calling them various names. They labelled as sothi, kurudu, mudam, sevidu, nondi, oomai, by the society. They feel that they are discriminated against by the society. The sudden onset of war has put them differently abled category. As a result, they feel huge differences in their social status, the way people look at them, and the respect others give them. Even though rights and laws are having kind of supportive, but the socio-cultural factors stand behind to give equal status to the disabled people even not properly treat them as human beings in the society. As a result, people with disabilities have to spend their lives inhouse, despite the desire to progress. In many cases even family members and community members who think that they are helping them and don't let them do any activity on their own lead to the formation of social stigma for the disabled people. Through the process of socialization culturally those can be freed from the marginalization they experience. Mainly, people with disabilities inclusivity, proactive skills development, family counseling can help them to move forward from the causes of social stigmatization.*

**Key words: Persons with disability, stigmatization, reason, labelled, discrimination**

# இலங்கையில் விசேட தேவைக்குட்பட்டோர் எதிர்நோக்கும் சமூகப்புறக்கணிப்புக்கான காரணங்கள்: வடமாகாணத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

லக்ஷி ஹரிஹரன்[1] மற்றும் அனுதர்ஷி கபிலன்[2]

*luxshe@soc.cmb.ac.lk*
*anutharsi@unvi.jfn.ac.lk*

## ஆய்வுச்சுருக்கம்

*இலங்கையில் வாழ்கின்ற விசேட தேவைக்குட்பட்டோர் எதிர்நோக்கும் சமூகப்புறக்கணிப்புக்கான காரணங்களை இந்த ஆய்வானது கண்டறிந்துள்ளது. இலங்கையில் நடைபெற்ற முப்பது வருடகால யுத்தமானது 2009ஆம் ஆண்டு முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. அதன் ஒரு விளைவாக சமூகத்தில் விசேட தேவைக்குட்பட்டோர் அதிகரித்தமையினைக் குறிப்பிடலாம். அவர்கள் பல்வேறுபட்ட பிரச்சினைகளை அனுபவித்தவர்களாக எதிர்மறை விளைவுகளைச் சந்திக்கின்றனர். இலங்கையின் வட மாகாணத்தில் 15% வீதமான விசேட தேவைக்குட்பட்டோரை யுத்தமானது உருவாக்கியுள்ளது. அந்தவகையில் இறுதி யுத்தம் நடைபெற்ற முல்லைத்தீவு மாவட்டம், கரைத்துரைப்பற்றுப் பிரதேச செயலகத்தை அடிப்படையாகக் கொண்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வின் பிரதான நோக்கமானது, யுத்தத்தினால் அங்கவீனர்களானவர்கள் எதிர்நோக்கும் சமூகப்புறக்கணிப்பிற்கான காரணங்களைக் கண்டறிதல் என்பதாகும். இதன் துணை நோக்கங்களாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம். யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட அங்கவீனர்கள் எதிர்நோக்கும் சமூகப்புறக்கணிப்புக்களைக் கண்டறிதல், அதனைக் குறைப்பதற்கான பரிந்துரைகளை முன்வைத்தல் போன்றனவாகும். இதற்காக அளவுசார் மற்றும் பண்புசார் ஆய்வு முறைமைகள் பின்பற்றப்பட்டுள்ளன. ஆய்வு மாதிரியாக உடல் அங்கவீனமானவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். நாற்பது வினாக்கொத்துக்களும் பத்து விடய ஆய்வு முறை மூலம் பால்நிலை அடிப்படையில் தரவு சேகரிக்கப்பட்டுள்ளன. கணனிப்பகுப்பாய்வு மற்றும் கருப்பொருள் பகுப்பாய்வு முறை மூலம் ஆய்வுப் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. விசேட தேவைக்குட்பட்டோர் சமூகப்புறக்கணிப்புக்களை எதிர்கொள்கின்றனர். சமூக-கலாசாரம், பொருளாதார மற்றும் உட்கட்டமைப்பு, அரசியல், சுகாதாரக் காரணங்கள் பின்புலமாக உள்ளன. அங்கவீனர்களுக்கான அணுகல்வசதிகள் இல்லாமை, சமயத்தின் அடிப்படையிலான அபசகுனம், மூடநம்பிக்கைகள் இவர்களைப் புறக்கணிப்பதற்குக் காரணமாகின்றன. விசேட தேவைக்குட்பட்டோரைப் பல்வேறு பட்டப்பெயர்களைக் கூறி அழைப்பதன் மூலமும் புறக்கணிப்பினை அனுபவிக்கின்றனர். சொத்தி, குருடன், முடம், செவிடு, நொண்டி, ஊமை போன்ற பெயர்களைக் கூறி அழைப்பதன் மூலம் அங்கவீனர்கள் தங்களைச் சமூகத்தவர்கள் பிரித்துப் பார்க்கின்ற நிலைகளை உணர்கின்றனர். திடீரென்று ஏற்பட்ட யுத்தம் என்ற காரணி இவர்களை விசேட தேவைக்குட்பட்டோராக மாற்றியுள்ளது. இதனால் சமூக அந்தஸ்து, மக்கள் அவர்களைப் பார்க்கின்ற பார்வை, கொடுக்கின்ற மரியாதை என்பவற்றில் பாரிய வேறுபாடுகளை உணர்கின்றனர். உரிமைகளும் சட்டங்களும் எழுத்துருவில் இருந்தாலும் விசேட தேவைக்குட்பட்டோராக சம அந்தஸ்தையும், சமவுரிமையையும் ஏன் அவர்களை மனிதர்களாக நினைப்பதற்குக் கூட சமூக கலாசாரக் காரணிகள் பின்நிற்கின்றன. இதனால், முன்னேற வேண்டும் என்ற எண்ணம் இருந்தாலும் விசேட தேவைக்குட்பட்டோர் தங்களது வாழ்வை வீட்டிற்குள்ளேயே கழிக்க வேண்டிய சூழல் உருவாகின்றது. பல சந்தர்ப்பங்களில் இவர்களுக்கு உதவுவதாக எண்ணி அதீத அக்கறை காட்டுவதும், அவர்களை எந்தவொரு செயற்பாட்டையும் சுயமாகச் செய்ய விடாத குடும்ப உறுப்பினர்கள் மற்றும் சமூகத்தவர்களும் கூட விசேட தேவைக்குட்பட்டோருக்கான சமூகப்புறக்கணிப்பு உருவாகக் காரணமாகி விடுகின்றனர். சமூகமயமாக்கல் செயன்முறையின் மூலம் கலாசார ரீதியாக அங்கவீனர்கள் அனுபவிக்கின்ற புறக்கணிப்பிலிருந்து விடுபடலாம். முக்கியமாக, மாற்றுத்திறனாளிகளை உள்ளீர்த்தல், முன்னெச்சரிக்கையாக அவர்களுக்கான திறன்களை வளர்த்தல்,*

*குடும்ப உளவள ஆலோசனையினை ஏற்படுத்தல் போன்றன விசேட தேவைக்குட்பட்டோரைப் புறக்கணிப்பிற்கான காரணங்களிலிருந்து முன்னோக்கிச் செல்லத் துணைநிற்கும்.*

**திறவுச் சொற்கள்: விசேட தேவைக்குட்பட்டோர், சமூகப்புறக்கணிப்பு, காரணங்கள், சமூகம், உள்ளீர்ப்பு**

## அறிமுகம்

இந்த ஆய்வு இலங்கையில் போரினால் விசேட தேவைக்குட்பட்டோரினது சமூகப்புறக்கணிப்புக்கான காரணிகளை ஆராய்வதாகும். குறிப்பாக, முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள கரைத்துரைப்பற்று பிரதேசசபையை மையமாகக் கொண்டு ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இலங்கையில் அரசாங்கப் படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நீடித்த ஆயுத யுத்தமானது 2009ஆம் ஆண்டு மே மாதம் முடிவுக்கு வந்தது. அதற்குப் பின்னரான விளைவுகளின் ஒரு பகுதியாக, வட பிராந்தியத்தில் சுமார் 15,000 பேர் போரினால் மாற்றுத்திறனாளிகளானவர்கள் ஆவர். மொத்தமாக போருக்குப்பின்னரான மாற்றுத்திறனாளிகளையும் சேர்த்து 30% வீதமான மாற்றுத்திறனாளிகள் வடமாகாணத்தில் வாழ்கின்றனர். (சமூகசேவைகள் திணைக்களம், 2011).

முதலாவதாக, யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் கரைத்துரைப்பற்றுப் பிரதேசத்தில் மீள்குடியேற்றப்பட்ட போரினால் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளின் சமூகப்புறக்கணிப்பு நிலைமைகளில் உள்ள உண்மையான தடைகளைப் புரிந்து கொள்வதற்கு உள்நாட்டு யுத்தம் பற்றியும், மாற்றுத்திறனாளிகள் பற்றியும் புறக்கணிப்புப் பற்றியும் தெரிந்து வைத்திருப்பது அத்தியாவசியமானதாகும்.

## மாற்றுத்திறனாளிகள் பற்றிய வரைவிலக்கணங்கள்

ஒக்ஸ்போர்டு அகராதி, "மாற்றுத்திறனாளிகள் என்பது நிரந்தர நோய் அல்லது காயம் உள்ளவர்களைக் குறிக்கப் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட சொல் என்கின்றது. இதனால் அவர்களின் உடலின் ஒரு பகுதியை முழுமையாகவோ அல்லது எளிதாகவோ பயன்படுத்துவதைக் கடினமாக்குகின்றது" என்று வரையறுக்கின்றது. மாற்றுத்திறன் பற்றிய மருத்துவ மாதிரியானது, மாற்றுத்திறன் ஒரு உயிரியல் அல்லது உடலியல் நெறிமுறையிலிருந்து ஒரு தனிநபரின் விலகலில் தோன்றியதாகக் கருதும் போது, சமூக மாதிரிகள் சமூகத்தின் உடல் மற்றும் மனப்பான்மைக் கட்டுப்பாடுகளுடன் ஒரு முரண்பாடான உடலின் தொடர்பு மூலம் உருவாக்கப்படுவதைக் காண்கிறது.

"அங்கவீனம்" என்ற சொல், மனிதர்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது. இது பாரம்பரிய முறைகளைப் பயன்படுத்தி தினமும் பணியை முடிப்பதைத் தடுக்கும் எந்தவொரு நிபந்தனையையும் குறிக்கிறது. தேசிய அரசாங்கங்களும் உலகளாவிய மனிதாபிமான முறைமைகளும் தங்களின் தனிப்பட்ட நோக்கங்களுக்காக இந்த வரையறையைச் சுருக்கி, குறிப்பிட்ட தீவிரத்தன்மை கொண்ட குறிப்பிட்ட குறைபாடுகள் உள்ளவர்களுக்கு மட்டுமே உதவி வழங்குவதாக உறுதியளித்துள்ளன. உதாரணமாக, டவுன் சிண்ட்ரோம் (Down syndrome) போன்ற இந்த அங்கீகரிக்கப்பட்ட இயலாமையினைக் குறிப்பிடலாம். சில மனநோய்களும் சில சூழ்நிலைகளில் செயலிழப்பதாகக் கருதப்படுகின்றன. வரலாற்று ரீதியாக, குறைபாடுகள் பெரும்பாலும் எதிர்மறையான வெளிச்சத்தில் காட்டப்படுகின்றன. இவ்வாறு பாதிக்கப்பட்ட ஒரு நபர் குணப்படுத்துவதற்கு அல்லது தொடர்ந்து

மருத்துவக் கவனிப்புக்கு உட்பட்ட ஒரு "நோயாளியாகக்" காணப்படும் போது அவரது நிலை அங்கவீனமானதாகக் காணப்படும். அதற்கான சமூக எதிர்வினைகள் நியாயமானவை, தடைகள் தவிர்க்க முடியாதவை. இந்த நிலை இயலாமைக்கான மருத்துவ மாதிரி என்று அழைக்கப்படுகிறது.

கடந்த 20 ஆண்டுகளில், இயலாமைக்கான சமூக மாதிரி எனப்படும் பார்வை முன்னுக்கு வந்துள்ளது. இந்த மாதிரியில், "அங்கவீனம்" என்பது மருத்துவ யதார்த்தத்தை விட ஒரு சமூகக் கட்டமைப்பாகவே பார்க்கப்படுகிறது. நாளாந்த வாழ்க்கைத் தழுவல்கள் தேவைப்படும் ஒரு நிபந்தனையால் ஒரு நபர் பலவீனமடையலாம். ஆனால் அவரது இயலாமை காரணமாக அவரது பெரும்பாலான பிரச்சனைகள் சமூகத்தால் எழுப்பப்பட்ட மனப்பான்மை மற்றும் உடல் தடைகளில் காணப்படுகின்றன. மருத்துவ மற்றும் சமூக மாதிரிகள் இரண்டும், ஒரு கட்டத்தில், வசதிகள் மற்றும் வாய்ப்புகள் தழுவல்கள் தேவைப்படும் நபர்களுக்கு முடிந்தவரை அணுகக்கூடியதாக இருக்க வேண்டும் என்று ஒப்புக்கொள்கிறது. உடல் தடைகளைத் தகர்த்தல் அல்லது சக்கர நாற்காலி சரிவுகள் போன்ற தழுவல்களை அமைப்பது "அணுகுநிலையை வளர்ப்பது" என்று அறியப்படுகிறது. மாற்றுத்திறனாளிகளின் அணுகல்நிலை என்பது சமூக மாதிரியினைப் பொறுத்தவரை முக்கியத்துவமானதாகும்.

பெடரல் சட்டங்கள் (Federal Law) அங்கவீனமுற்ற நபரை "உடல் அல்லது மனநலக் குறைபாடு உள்ள எந்தவொரு நபரும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட முக்கிய வாழ்க்கைச் செயல்பாடுகளைக் கணிசமாகக் கட்டுப்படுத்துகிறார். அத்தகைய குறைபாட்டின் பதிவு அல்லது அத்தகைய குறைபாடு இருப்பதாகக் கருதப்படுகிறார்" என்று வரையறுக்கிறது. ஒரு அங்கவீனம் என்பது, "ஒரு செயல்பாட்டைச் செய்வதற்கான கட்டுப்பாடு அல்லது திறன் இல்லாமை அல்லது ஒரு மனிதனுக்கு இயல்பானதாகக் கருதப்படும் எல்லைக்குள் வரையறுக்கின்றது" (WHO, 2004). குறைபாடுகள் குறைபாடுகளால் ஏற்படுவதாகக் கருதப்பட்டது. அவை உளவியல், உடலியல் அல்லது உடற்கூற்றியல் அமைப்பு அல்லது செயல்பாட்டின் இழப்புகள் அல்லது அசாதாரணங்கள் என வரையறுக்கப்பட்டன. குறைபாடுகள் மற்றும் இயலாமைகள் இரண்டும் அங்கவீனமுற்றவர்களுடன் தொடர்புடையதாகக் காணப்பட்டது. அவை இயல்பானதாகக் கருதப்படும் ஒரு வகிபங்கினை நிறைவேற்றுவதைக் கட்டுப்படுத்தும் அல்லது தடுக்கும் குறையாக வரையறுக்கப்பட்டுள்ளன.

இலங்கைச் சூழலில், அங்கவீனமுற்ற நபர் என்பது "அங்கவீனமுற்றவர்" என்று வரையறுக்கப்படுகிறது, உடல் மற்றும் மனத் திறன்களில் ஏதேனும் குறைபாட்டின் விளைவாக, பிறவியில் இருந்தாலும், இல்லாவிட்டாலும், தன்னை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ தங்கள் வாழ்க்கைத் தேவையை உறுதிப்படுத்திக் கொள்ள முடியாதவர்" என வரையறுக்கின்றது (The Protection of the Rights with Disabilities Act, 1996). "பார்வை, பேச்சு, செவிப்புலன், இயக்கம், அறிவுசார் மற்றும் மனநலக் குறைபாடுகள் மற்றும் இயலாமை கொண்டவர்கள், கால்-கை வலிப்பு மற்றும் பிற காரணங்களின் விளைவாக அங்கவீனமானவர்களும் இதனுள் அடங்குகின்றனர். இது பல குறைபாடுகளையும் உள்ளடக்கியுள்ளது. இது ஒரு தனிநபரின் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பல்வேறு குறைபாடுகளின் கலவையாகும்" (National Policy on Disability for Sri Lanka, 2003).

## இலங்கையில் மாற்றுத்திறனாளிகள்

இலங்கையின் சனத்தொகையில் 7% வீதம் மாற்றுத்திறனாளிகள் உள்ளனர். அவர்களில் 90% பேர் கிராமப்புறங்களில் வாழ்பவர்களாகவே காணப்படுகின்றனர் (International Labour Office Colombo, 2010). 1995ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு வகையான அங்கவீனமுற்ற நபர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. இந்த நபர்கள் மற்றவர்களை விட இறப்பு வீதம் அதிகரித்தவர்களாகவும் இறந்தும் உள்ளனர். எனவே, அவர்களின் ஆயுட்காலம் மிகவும் குறைவாகவே அமைவு பெற்றுள்ளது. மாறாக, பலவிதமான அங்கவீனமுற்ற குழந்தைகளின் நேரடி பிறப்புக் காரணமாகவும் அங்கவீனமானவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

பிறப்பு, நோய், விபத்து மற்றும் போர் போன்றவற்றின் காரணமாக மாற்றுத்திறனாளிகள் உருவாக்கப்பட்டுள்ளனர். பார்வைக் குறைபாடு உள்ளவர்கள், கைகளில் அங்கவீனம், கால்களில் அங்கவீனம் மற்றும் பக்கவாதம் ஆகியவற்றினால் அங்கவீனமுற்றவர்கள் இலங்கையில் வேகமாக அதிகரித்து வருகின்றனர். இந்தக் குறைபாடுகளுக்கு இலங்கையில் ஏற்பட்டுள்ள நோய்களும் போர்களும் முக்கிய காரணங்களாகும். ஆனால் 15-44 வயதிற்குட்பட்ட நபர்களும் குறிப்பிடத்தக்க வகையில் கைகள், கால்கள் மற்றும் அங்கம் செயலிழந்த அங்கவீனங்களை எதிர்கொள்கின்றனர். மேலும், 20 வயது இளைஞர்களே அங்கவீனத்தால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். இது அங்கவீனத்திற்கு மிகவும் ஆபத்தான வயதாகும் (Saddhananda, 2004).

மாற்றுத்திறனாளிகளின் கல்விநிலையினை எடுத்துக்கொண்டால், மிகவும் பின்தங்கிய நிலையிலேயே அவர்களின் கல்விநிலை காணப்படுகின்றது. பிறந்ததிலிருந்தே அங்கவீனமுற்றவர்களின் பெரும்பாலானோர் பாடசாலைக்குச் சென்றதே இல்லை. அவர்களின் கல்வியறிவின்மை வீதமானது மிகவும் அதிகமாகும். மாடிப்படிகள் மற்றும் குறுகிய நுழைவாயில் கொண்ட கட்டிடங்களுக்கு மாற்றுத்திறனாளிகளுக்கு மாற்று இடம் வழங்கப்படுவது மிகவும் குறைவாகும். குறிப்பாக, சக்கர நாற்காலிகளைப் பயன்படுத்துபவர்கள் அந்த சமயங்களில் சிரமத்திற்கு உள்ளாகின்றனர். நாட்டில் பொதுப் போக்குவரத்து அமைப்பு மிகவும் மோசமான நிலையிலேயே காணப்படுகின்றது. இது மாற்றுத்திறனாளிகளுக்கு மட்டுமல்ல, சாதாரண மக்களுக்கும் பொதுப்போக்குவரத்து வசதி என்பது இன்றுவரை பிரச்சினையாகவே உள்ளது. பொதுவான போக்குவரத்து அமைப்பில் சக்கர நாற்காலிகளுக்கு இடமில்லை. அவர்கள் போக்குவரத்துக்குத் தனிப்பட்ட அல்லது வாடகை வாகனங்களையே பயன்படுத்த வேண்டியுள்ளது. பார்வையற்றவர்களுக்கு ரயில் நிலையங்கள், பாதசாரிகள் கடக்கும் இடங்கள் போன்ற பொது இடங்களில் குறைந்தபட்ச வசதிகள் செய்து தரப்படவில்லை. அதற்கான அணுகல் வசதிகள் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது.

மாற்றுத்திறனாளிகளுக்கென்று பிரத்தியேகமாக மொழிபெயர்ப்புச் செய்யப்பட்ட பிரெய்ல் (braile) அல்லது ஒலி நாடாக்கள் (audio tapes) என்பன கிடைப்பது மிகவும் அரிதாகவே காணப்படுகின்றது. அதனால் அவர்கள் அதிருப்தி அடைந்துள்ளனர். பல தொலைக்காட்சி அலைவரிசைகள் அதிகாலை முதல் நள்ளிரவு வரை பல்வேறு வகையான நிகழ்ச்சிகளை ஒளிபரப்புகின்றன. ஆனால் காது கேளாதவர்களுக்குச் சைகை மொழி வசதிகள் அங்கு மிகவும் குறைவாகவே உள்ளன. பொதுச் செய்திப்பத்திரிகைகளும் அதே நிலையிலேயே உள்ளன. அதனால் அனைவருக்கும் பொதுவாகத் தகவல்களும் சமகால விடயங்களும் சென்றடைவதில்லை. இந்தக் காரணங்கள் நேரடியாகவே அங்கவீனர்களின் கல்வியறிவின்மை விகிதத்தை அதிகரிக்கின்றன. எனவே

மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான பாடசாலைகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படல் வேண்டும் மற்றும் அவர்களுக்கான சுற்றுச்சூழல் வசதிகளை மேம்படுத்தப்படல் வேண்டும் (Saddhananda, 2004).

மாற்றுத்திறனாளிகளுக்கு வேலை வாய்ப்பு வசதிகள் மிகவும் குறைவாகும். ஏனெனில், நிறுவனங்கள் வேலை வாய்ப்புக்களை வழங்குவதில்லை மற்றும் விசேட தேவைக்குட்பட்டோரை வேலைக்கு அமர்த்துவதால் வேலை வினைத்திறனாக நடைபெறாது என்று எண்ணுகின்றனர். ஆனால் சில தொழில் பயிற்சி பெற்றவர்கள் தொழில்களைப் பெறுவதற்கான வாய்ப்புகள் அதிகமாகக் கிடைத்தாலும் அதற்கான வசதி மற்றும் அணுகல் நிலைகள் மிகவும் குறைவாகவே உள்ளது. மாற்றுத்திறனாளிகளின் கணிசமான விகிதாசாரம் சில தொழில்களைப் பயிற்றுவிக்கும் நிலையில் உள்ளது. அங்கவீனர்களுக்கான தன்னார்வ நிறுவனங்களில் வசிப்பவர்கள் நாட்டில் மிகவும் குறைவாகும். இது மொத்த மாற்றுத்திறனாளிகள் மக்கள் தொகையில் 5.6% ஆகும். பெரும்பான்மையானவர்கள் அவர்களது குடும்பத்தினர் அல்லது உறவினர்களால் அவர்களுடனேயே வாழ்கின்றனர். 10.7% பெண்களும், 7.2% ஆண்களும் மாற்றுத்திறனாளிகளுக்கான நிறுவனங்களில் வாழ்கின்றனர். இருப்பினும், நிறுவனங்களில் வசிக்கும் மாற்றுத்திறனாளிகளின் கல்வித்திறன் ஏனைய விசட தேவைக்குட்பட்டோரை விட சிறப்பாக உள்ளது. மாற்றுத்திறனாளிகளின் உறவினர்கள் கருணை காரணமாக அவர்களை நிறுவனங்களில் சேர்க்க விரும்புவதில்லை. ஆனால், வறுமை மற்றும் வசதிகள் இல்லாத காரணத்தால் அவர்களால் கல்விக்குத் தேவையான வசதிகளை செய்து கொடுக்க முடியவில்லை. எனவே குடும்ப உறுப்பினர்களுக்குள் வசிப்பதை விட விசேட தேவைக்குட்பட்டோரை முறையான நிறுவனங்களில் சேர்ப்பது நல்லது. அதே நேரத்தில், அரசாங்கமும் பிற சமூக சேவை அமைப்புகளும் நிறுவனங்களை முறையாக பராமரிக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் (Saddhananda, 2004).

குழந்தைப் பருவத்தில் ஊட்டச்சத்துக் குறைபாடு மற்றும் விற்றமின் குறைபாடுகள் உட்பட தாய்மார்கள் மற்றும் குழந்தைகளின் போதிய ஊட்டச்சத்து குறைபாடுகள் போன்றன குழந்தைகளின் மாற்றுத்திறனுக்கு வழிவகுக்கின்றன. குடும்பத்தின் முக்கிய உறுப்பினர் அல்லது குடும்பத் தலைவர் மாற்றுத்திறனாளியாக இருந்தால், அது முழு குடும்பத்திற்கும் ஒரு பேரழிவு விளைவை ஏற்படுத்துகிறது. முழு குடும்பமும் வறுமையில் வாழ்வதற்கு அது முக்கிய பிரதான காரணமாக அமையும்.

வறுமை நிலைக்குக் காரணமாக அமைவது குறைந்த வருமானம் பெறுவதே ஆகும். இதனால் சமூக விலக்கு மற்றும் அதிகாரமின்மை போன்ற சமூக விளைவுகளும் உருவாகும். இதன் விளைவாக, அவர்களின் குழந்தைகள் பாடசாலையை விட்டு வெளியேறி, தங்கள் வாழ்வாதாரத்தைக் கொண்டு செல்வதற்காகவும் குடும்பப் பொறுப்பை தாம் எடுத்துக்கொள்வதற்காகவும் எப்படியாவது பணத்தைத் தேட முயற்சிக்கின்றனர். இத்தகைய குழந்தைகள் சில சந்தர்ப்பங்களில், சட்டவிரோத போதைப்பொருள் கடத்தல் மற்றும் போதைப் பழக்கத்திற்கு மிகவும் பாதிக்கப்படக்கூடிய குழுவாக சமூகத்தில் சட்டவிரோதமான செயற்பாடுகளைச் செய்கின்றனர். எனவே அங்கவீனமும் வறுமையும் ஒன்றோடொன்று பிரிக்கமுடியாத வகையில் இணைக்கப்பட்டுள்ளன. எனவே வறுமையை ஒழிப்பது இயலாமை குறைப்புக்கு வழிவகுக்கும். ஏழைக் குடும்பங்களுக்குக் கொடுப்பனவுகளை மட்டுமே வழங்காது, அவர்களின் பொருளாதார நடவடிக்கைகளுக்கு ஊக்கமளித்து அவர்களின் வருமானத்தை நிர்வகிப்பதற்குத் தேவையான வழிவகைகளைச் செய்ய வேண்டியது மிகவும் முக்கியமானதாகும்.

## வடமாகாணத்தில் உள்ள மாற்றுத்திறனாளிகள்

30 வருட கால யுத்தம் நாட்டிற்குப் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியது என்பது கண்கூடு. குறிப்பாக இறுதிக்கட்டப் போரின் இறுதிக் காலப்பகுதியானது இலங்கையின் வடக்குப் பிராந்தியத்தில் இடம்பெற்றது. எனவே பாதிக்கப்பட்டவர்கள் குறிப்பாக மாற்றுத்திறனாளிகளின் எண்ணிக்கை அப்பிராந்தியத்தில் அதிகம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

பின்வரும் அட்டவணை 1.1 வடக்கில் உள்ள மாற்றுத்திறனாளிகள் பற்றிய விபரங்களைக் காட்டுகிறது.

| District | Blind | Deaf | Dumb | Physically handicapped | Total |
|---|---|---|---|---|---|
| Jaffna | 1,465 | 1,217 | 937 | 3,044 | 8,245 |
| Kilinochchi | 415 | 163 | 124 | 1,624 | 2,475 |
| Mannar | 292 | 174 | 149 | 765 | 1,645 |
| Mullaitivu | 259 | 161 | 107 | 2,087 | 2,771 |
| Vavuniya | 400 | 221 | 125 | 835 | 1,744 |
| Total | 2,831 | 1,936 | 1,442 | 7,355 | 15,880 |

Source: Department of Social Services, 2011

அட்டவணை 1. 1 மாவட்ட ரீதியான விசட தேவைக்குட்பட்டோர்

அட்டவணை 1.1 இன்படி, இலங்கையின் வடக்கு மாகாணத்தில் 15,880 உடல் ரீதியான மாற்றுத்திறனாளிகள் வாழ்கின்றனர். அங்கு 2771 பேர் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர். முல்லைத்தீவு மாவட்டமானது யாழ்ப்பாணத்திற்கு அடுத்தபடியாக அதிகளவான மாற்றுத்திறனாளிகளைக் கொண்ட மாவட்டமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

## சமூகப்புறக்கணிப்பு

ஒரு கருத்தாக புறக்கணிப்பு துல்லியமற்றது. இது அணுகுமுறைகள், உணர்வுகள் மற்றும் நடத்தைகளை உள்ளடக்கியது (Morgan et al, 2002 as cited by Nolan et al, 2006).

Nolan et al (2006) பின்வருவனவற்றை உள்ளடக்கிய புறக்கணிப்பின் பல வரைவிலக்கணங்களை மேற்கோள் காட்டுகின்றனர்.

- "ஒரு நபரை மற்றவர்களிடமிருந்து வேறுபடுத்தும் அவமானம் அல்லது புறக்கணிப்பின் அடையாளம்" (Byrne, 2000).
- "சில பண்புகளைத் தனிமைப்படுத்தி, அவற்றை விரும்பத்தகாததாக மதிப்பிடும் மற்றும் அவற்றை வைத்திருக்கும் நபரின் மதிப்பைக் குறைக்கும் ஒரு சமூக எதிர்வினை" (Miles, 1981).
- "ஒரு குறிப்பிட்ட சமூகச்சூழலில் மதிப்பிழக்கப்படும் ஒரு சமூக அடையாளத்தை வெளிப்படுத்தும் சில பண்புக்கூறு அல்லது பண்பு" (Crocker et al, 1998).

- கூறுகளின் கூட்டு நிகழ்வு – முத்திரையிடல், முற்சாய்வு, பிரித்தல், அந்தஸ்து இழப்பு மற்றும் பாகுபாடு காட்டுதல் - மேலும் புறக்கணிப்பு ஏற்பட, அதிகாரம் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதைக் குறிக்கிறது (Link et al, 2001).
- "பண்புக்கூறு மற்றும் தப்பெண்ணப் பண்புக்கூறுகளுக்கு இடையே உள்ள ஒரு சிறப்பு வகையான உறவு. அது ஆழமாக மதிப்பிழக்கச் செய்கிறது... ஒரு முழு மற்றும் வழக்கமான நபரிலிருந்து வேறுபட்ட, விதிவிலக்குச் செய்யப்பட்ட ஒருவராக... புறக்கணிப்புக் கொண்ட ஒரு நபர் நிச்சயமாக மனிதராக இருக்க மாட்டார் என்று நாங்கள் நம்புகிறோம்..." (Goffman, 1963) என்று வரையறுக்கின்றது.

புறக்கணிப்பானது மக்களை ஓரங்கட்டலாம் மற்றும் அவர்களின் சொந்த சமூகத்திலிருந்து ஒதுக்கி வைக்கலாம். திறன் கொண்டவர்கள் அரச நலன்களைச் சார்ந்து இருக்கக்கூடிய தகுதியுள்ள வேலைகளைப் பெறுவதை இது நிறுத்தலாம் (McKeever, 2006). புறக்கணிப்பானது மனநோயால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு எதிராகப் பாகுபாடு காட்டப்படுவதற்கும் தவறாக நடத்தப்படுவதற்கும் காரணமாக இருக்கலாம். மேலும் மனநலக் குறைபாடுகள் உள்ள சிலருக்கு அவர்களின் கோளாறுக்கான உதவியை நாட மறுப்பதற்குப் பங்களிக்கக்கூடும். இது அவர்களுக்குத் தேவையான சிகிச்சைகளைப் பெறுவதைத் தடுக்கின்றது. குறைபாடுகள் உள்ளவர்களுக்கு எதிரான புறக்கணிப்பானது பெரும்பாலும் தவறான கருத்துகளின் அடிப்படையில் ஒரே மாதிரியானவை.

ஒரு தப்பெண்ணம் என்பது ஒருவரைப் பற்றித் தெரியாது அவரைப் பற்றிய தப்பிப்பிராயங்களை வளர்த்துக் கொள்வதாகும் என்பது சமூக எண்ணமாகும். இது மாறுபாட்டை ஒப்புக் கொள்ளாததால், தவறாக வழிநடத்தும் சாத்தியம் உள்ளது (Nolan et al, 2006). சமூகப் புறக்கணிப்பானது உள் மற்றும் வெளிப்புற விளைவுகளைக் கொண்டுள்ளது. இது மக்களின் வாழ்க்கைத் தரம் மற்றும் சமூக மற்றும் உளவியல் நல்வாழ்வைப் பாதிக்கின்றது. இது மன அழுத்தம், பதட்டம் மற்றும் மேலும் புறக்கணிப்புக்களை ஏற்படுத்துகிறது. இது குறைந்த ஏற்றுக்கொள்ளல், பாகுபாடு, நிராகரிப்பு மற்றும் சமூக விலகலை ஏற்படுத்துகிறது. இது பெயரிட்டு (Labelling) அங்கவீனர்களை அடையாளப்படுத்துவதால் வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொள்வதில் பல கஷ்டங்கள் காணப்படுகின்றன. இதனால் சேவைகளுக்கான அணுகலைப் பெற்றுக்கொள்வதிலும் பிரச்சினையாகின்றது. இது சுயமரியாதை மற்றும் சுய-செயல்திறனைக் குறைக்கும் செற்பாடுகளாகும் (Nolan et al, 2006).

தங்களைப் புறக்கணித்தவர்கள் என்று உணரும் நபர்கள் புறக்கணிக்கப்படும் கருத்துக்களை உள்வாங்கிக் கொள்ளலாம் (Graham et al, 2003 cited by Nolan et al, 2006). புறக்கணிப்பைச் சமாளிக்கும் வழிமுறைகள் பின்வருமாறு: 1) தவிர்த்தல்-திரும்பப் பெறுதல், 2) கல்வி மற்றும் 3) இரகசியம் (Goffman, 1963 and Link et al, 1991 as cited by Nolan et al, 2006). சமூக அவமானமானது ஏனையவர்களிமிருந்து தங்களைத் தனிமைப்படுத்திக் கொள்ளும். மறுப்பு மற்றும் பாசாங்கு என்பன சுய-பாதுகாப்புக்கான ஒரு வழிமுறையாக இருக்கலாம். ஆனால் உதவி கோரப்படாமலோ அல்லது வழங்கப்படாமலோ இருக்கலாம் என்று குறிப்பிடுகின்றது (Nolan et al, 2006).

2000 ஆம் ஆண்டு காலப்பகுதியில், பிரித்தானிய சமூக மனப்பான்மை கணக்கெடுப்பில் பதிலளித்தவர்களில் 35% சதவீத நபர்கள் மாற்றுத்திறனாளிகளைப் பற்றிய தப்பெண்ணங்கள் "அதிகளவில்" இருப்பதாக எண்ணுகின்றனர். 51 சதவீத நபர்கள் "ஓரளவு" இருப்பதாக நினைக்கிறார்கள் மற்றும் 3 சதவீதம் நபர்கள் மட்டுமே சமூகத்தில் பாரபட்சம் "இல்லை"

என்று எண்ணுகின்றனர். ஆயினும்கூட, சிலர் தாங்களே தப்பெண்ணம் கொண்டவர்கள் என்பதை ஒப்புக்கொள்ளத் தயாராகவே உள்ளனர். எனினும், அதனை அளவிடுவதானது கடினமாகும். இருப்பினும், வெவ்வேறு காட்சிகளில் இருந்து சான்றுகள் வகுப்பறை முதல் பேரூந்து நிறுத்தம் வரை, விசேட தேவைக்குட்பட்டவர்களுக்கான பலவிதமான உதவியற்ற அல்லது ஆக்கிரமிப்பு மனப்பான்மையை விளக்குகிறது. இது பெரும்பாலும் குறைபாடுகள் அல்லது சுகாதார நிலை மற்றும் இன தோற்றம், வயது மற்றும் பாலினம் ஆகியவற்றைப் பொறுத்து மாறுபடுகின்றது (Massie, 2006).

விசேட தேவை பற்றிய பழைய தப்பிப்பிராயங்கள் மற்றும் தவறான புரிதல்கள் புதிய சமூகக் கட்டுமானங்களால் மாற்றப்படல் வேண்டும். இது நடைபெற்றால் மட்டுமே மாற்றுத்திறனாளிகள் சுதந்திரமான மற்றும் பொறுப்பான குடிமக்களாக வாழ்வதற்குத் தேவையான அடிப்படை நிலைமைகளை அணுகுவதற்குத் தேவையான வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்வர். பொதுப் பிரதிநிதிகள் மற்றும் சாதாரண குடிமக்கள் ஒரே மாதிரியாக பன்முகத்தன்மையை கணக்கில் எடுத்துக்கொண்டு, வேறுபாடுகளை வரவேற்கும் மற்றும் பூர்த்தி செய்யும் சமூகங்களை நிறுவுவது மாற்றங்களை ஏற்படுத்துவதன் மூலம் சாத்தியமாகும்.

## ஆய்வுப் பிரச்சினை

போரினால் மாற்றுத்திறனாளிகளாகிய குடிமக்கள் தங்கள் தற்போதைய வாழ்க்கையை உயர்த்துவதற்குப் பல தடைகள் காணப்படுகின்றன. தமது மாற்றுத்திறனுடன் அவர்கள் இயல்பான வாழ்க்கையில் சந்திக்கும் தடைகளில் ஒன்று சமூகப் புறக்கணிப்பாகும். அவர்கள் சமூகத்தில் ஒதுக்கப்பட்டு, பாகுபாடு காட்டப்படுகின்றனர். மேலும் அவர்களின் தேவைகள் மற்றும் உரிமைகள் வளர்ச்சிச் செயல்பாட்டில் கருத்தில் கொள்ளப்படுவதில்லை அல்லது முன்னுரிமை அளிக்கப்படுவதில்லை. அவர்கள் மீதான சமூகப் புறக்கணிப்பிற்குப் பின்னால் பல காரணிகள் உள்ளன. எனவே இந்த ஆய்வின் பிரச்சனையானது இலங்கையில் யுத்தத்தினால் விசேட தேவைக்குட்பட்டோராக மாறிய மக்கள் எதிர்நோக்கும் சமூகப் புறக்கணிப்பின் பின்னணியில் உள்ள காரணிகளை ஆராய்வதனை மையமாகக் கொண்டுள்ளது.

இலங்கை ஒரு சிறிய தீவு நாடாக இருந்தாலும், அது பல இன, பல கலாச்சார மற்றும் பல மத பின்னணியைச் சேர்ந்த மக்களைக் கொண்டுள்ளது. இந்த பல இன மற்றும் பின்னணியின் விளைவாக மக்களிடையே பல முரண்பாடுகள் இருந்தன. கடந்த மூன்று தசாப்தங்களாக விடுதலைப் புலிகளுக்கும் ஆயுதப் படைகளுக்கும் இடையில் மிகப் பெரிய மோதல் ஏற்பட்டது. அந்தக் கொடூரமான மோதலால் ஏராளமான உயிர்கள் மற்றும் உடைமைகள் இழக்கப்பட்டன. ஆயுத மோதல் பல்வேறு வகையான விசேட தேவைக்குட்பட்டோரை உருவாக்கியது. இலங்கையின் வடக்கு மாகாணம் குறிப்பாக கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்கள், இலங்கையின் இறுதி யுத்த காலத்தில் பெரிதும் பாதிக்கப்பட்டன. இலங்கையில் 1.6 மில்லியன் விசேட தேவைக்குட்பட்டவர்கள் வாழ்கின்றனர். ஆயுத மோதல்கள் காரணமாக இந்த எண்ணிக்கை அதிகரித்துள்ளது. மற்றும் குறிப்பாக கரைத்துரைப்பற்றுப் பிரதேசத்தில் 486 விசேட தேவைக்குட்பட்டோர் வீடுகளுக்குள் மற்றும் சமூகத்தில் பின்தங்கிய நிலையில் உள்ளனர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

போரினால் ஏற்பட்ட அனைத்து சவால்களையும் சமாளிக்க நாடு முயற்சித்து வருகிறது. மோதலுக்குப் பின்னர் இலங்கையின் உடனடி இலக்காக இடம்பெயர்ந்தவர்களை மீள்குடியேற்றுவதுடன் வாழ்வாதாரம்

மற்றும் புதிய உட்கட்டமைப்புகளை வழங்குவதற்கான பொருளாதார அபிவிருத்தியும் ஆகும்.

போரால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் வளர்ச்சியானது பெரும்பாலான புனரமைப்பு மற்றும் நல்லிணக்க செயற்பாடுகள் முக்கியமாக விவசாய மேம்பாடு, நுண் தொழில்துறை அபிவிருத்தி மற்றும் மீள்குடியேற்ற வீடமைப்பு திட்டமிடல் ஆகியவற்றில் கவனம் செலுத்துகின்றன. அவர்கள் ஏழைகளில் மிகவும் ஏழ்மையானவர்கள் மற்றும் சமூக, பொருளாதார மற்றும் கலாசார ரீதியாக பாதிக்கப்படக்கூடிய மக்களை முன்னேற்றுவதனை அடிப்படையாகக் கொண்டுள்ளது. சமூகம் அவர்களை உள்ளடக்கினால் அவர்கள் தற்போதைய நிலையை உயர்த்துவார்கள்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகள் மற்றும் அவர்களின் சமூக மற்றும் உளவியல் சிகிச்சை என்பது அவசியமான நடைமுறையாகும். சமூகப் புறக்கணிப்பானது போரால் மாற்றுத்திறனாளிகளான மக்களுக்குத் தடைகளை விதிக்கின்றது. பெரும்பாலான ஆய்வுகள் மாற்றுத்திறனாளிகளின் மனித உரிமைகள், சுகாதார வசதிகள் மற்றும் தடைகள் பற்றியவையாகும். அவையும் மிகவும் குறைவானவையாகவும் தெளிவான விளக்கங்களைக் கொண்டவையாகவும் இல்லை. எனவே, இத்தகைய பின்புலங்களில் ஆய்வுகள் செய்யப்படுவது அவசியமாகும்.

இலங்கையில் வாழ்வாதார வசதிகளானவை போர்-மாற்றுத்தினாளிகளின் ஆய்வுகளின் சமூகப் புறக்கணிப்பு மற்றும் உளவியல் தாக்கம் ஆகியவை இந்த ஆய்வுப் பகுதியில் குறைந்த சதவீதத்தில் உள்ளன. விசேட தேவைக்குட்பட்டோரைச் சமூகத்தில் சேர்ப்பதில் உள்ள தடைகளைக் கருத்தில் கொண்டு, இந்த ஆய்வின் ஆய்வுப் பிரச்சினையாது சமூகப்புறக்கணிப்பின் பின்னணியில் உள்ள காரணிகள் எவை என்பதனைக் கண்டறிவாதாகும்.

## ஆய்வு நோக்கங்கள்

இந்த ஆய்வு இரண்டு வகையான நோக்கங்களைக் கொண்டுள்ளது. பிரதான நோக்கம் மற்றும் துணை நோக்கங்கள் என்பனவாகும்.

ஆய்வின் பிரதான நோக்கமானது, யுத்தத்தினால் விசேட தேவைக்குட்பட்டவர்கள் எதிர்நோக்கும் சமூகப்புறக்கணிப்பிற்கான காரணங்களைக் கண்டறிதல் என்பதாகும். இதன் துணை நோக்கங்களாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம். யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட விசட தேவைக்குட்பட்டவர்கள் எதிர்நோக்கும் சமூகப்புறக்கணிப்புக்களைக் கண்டறிதல் மற்றும் அதனைக் குறைப்பதற்கான பரிந்துரைகளை முன்வைத்தல் போன்றனவாகும்.

## சமூகப்புறக்கணிப்புத் தொடர்பான சமூகத்தொடர்புக் கோட்பாடு

எர்விங் கோ.ஃப்மேனின் (1963) (Erving Goffman) முன்னோடி பணியானது சமூக இடைவினைக் கோட்பாட்டின் அடிப்படையில் ஒரு கருத்தியல் கட்டமைப்பை வழங்குகிறது. கோ.ஃப்மேனின் (1963:3) கருத்துப்படி, புறக்கணிப்பு என்பது ஆழமாக இழிவுபடுத்தும் ஒரு பண்பு மற்றும் அந்தப் புறக்கணிப்பைச் சுமக்கும் நபர் மற்றவற்றிலிருந்து வேறுபட்டவர் அல்லது விரும்பத்தகாத வகையானவர் என்று குறிப்பிடுகிறார்.

ஒருவரின் மெய்நிகர் சமூக அடையாளத்திற்கும் (ஒரு குறிப்பிட்ட நேரத்தில் கொடுக்கப்பட்ட சூழ்நிலையில் சமூகம் அவனிடமிருந்து/அவளிடமிருந்து என்ன எதிர்பார்க்கிறது) மற்றும் உண்மையான

அடையாளத்திற்கும் (உண்மையில் என்ன நபர்) இடையே விரும்பத்தகாத முரண்பாடு இருக்கும்போது புறக்கணிப்பு உருவாகின்றது. இவ்வாறு, புறக்கணிப்பு அந்த நபரை விரும்பத்தகாதவராகவும், சாதாரணமாக இருப்பவர்களிடமிருந்து வேறுபட்டதாகவும் ஆக்குகிறது (Goffman, 1963:5). எடுத்துக்காட்டாக, இந்தக் கோட்பாட்டின்படி சமூகப் புறக்கணிப்பைச் சுமக்காதவர்கள், தாழ்வு மனப்பான்மை இருக்கும்போது புறக்கணிப்பு எழுகிறது. இது தோல்விகள், புறக்கணிப்பைச் சுமக்கும் நபர் கொண்டிருக்கும் சமூக எதிர்பார்ப்புகள் மற்றும் அதை உணர்தல் ஆகியவற்றிலிருந்து எழுகிறது. இந்த உணர்வு, புறக்கணிக்கப்பட்ட நபரை சாதாரணமாக ஏற்றுக்கொள்ளும் கேள்வியை எழுப்புகிறது. பின்வரும் பத்தியிலிருந்து இது மிகவும் தெளிவாகத் தெரிகிறது.

> புறக்கணிக்கப்பட்ட தனிநபரின் வாழ்க்கைச் சூழ்நிலையின் மைய அம்சத்தை இப்போது கூறலாம். தெளிவற்ற முறையில் ‘‘ஏற்றுக்கொள்ளுதல்’’ என்று அழைக்கப்பட்டால், இது அடிக்கடி என்ன என்பது ஒரு கேள்வி. அவருடன் தொடர்பு கொண்டவர்கள், அவரது சமூக அடையாளத்தின் மாசுபடாத அம்சங்கள் அவர்களை எதிர்பார்த்த விரிவாக்கத்திற்கு இட்டுச் சென்றது மற்றும் பெறுவதை எதிர்பார்க்க வழிவகுத்த மரியாதை மற்றும் மரியாதையை அவருக்கு வழங்கத் தவறிவிட்டனர் என்பதே பொருளாகின்றது. இந்த மறுப்பை குறிப்பிட்ட புறக்கணிக்கப்பட்ட தனிநபர் தனது தனிப்பட்ட குணாம்சங்கள் மூலம் எதிரொலிக்கின்றார் (Goffman, 1963: 8).

1950களில் கோ.ஃப்மேன் புறக்கணிப்புப் பற்றிய தனது அடிப்படை ஆய்வை மேற்கொண்டார். சமூகத் தகுதியின்மைக்கு இலக்கான நிபந்தனைகளின் பகிரப்பட்ட சமூக அர்த்தத்தின் அடிப்படையில், விலகலைக் குறிப்புடன் மட்டுமே புறக்கணிப்பை வரையறுக்க சிறிது தயக்கம் காட்டினார். அனைத்து வகையான விலகல்களையும் ஒரே மாதிரியான வகையாகச் சரியாகக் கருத முடியுமா என்று அவர் கேள்வி எழுப்பினார். அவர் எழுதியது பின்வருமாறு:

> சமூக அறிவியலைச் சுற்றி வசிப்பவர்கள், ‘‘விலகல்’’ என்ற வார்த்தையைப் பயன்படுத்துவதில் மிக விரைவாக வசதியாகிவிட்டார்கள். அந்தச் சொல்லைப் பயன்படுத்துபவர்களுக்குப் போதுமான பொதுவானது இருப்பதால், ஒட்டுமொத்தமாக அவர்களைப் பற்றிக் குறிப்பிடத்தக்க விஷயங்களைக் கூற முடியும் (கோ.ஃப்மேன், 1963 , பக். 167).

கோ.ஃப்மேனின் கூற்றுப்படி, ஒரு சாதாரண மற்றும் புறக்கணிக்கப்பட்ட நபருக்கு இடையே ஒரு சமூக உறவு ஒரு காலத்தில் பல்வேறு பரவல்களில் நிகழலாம் என்றாலும், அவர் பெரும்பாலும் ‘‘கலப்பு நடத்தைகளில்’’ ஆராய்கிறார். ஓர் உதாரணத்திற்கு, அதே சமூகச் சூழ்நிலையில் புறக்கணிக்கப்பட்ட ஒரு சாதாரண நபரின் உடனடிச் சமூகத் தொடர்பினைக் குறிப்பிடலாம் (1963: 12).

சமூக உறவானது சாதாரண மற்றும் புறக்கணிக்கப்பட்ட இருவரும் ஒருவரையொருவர் தவிர்ப்பதற்காகத் தங்கள் வாழ்க்கையைச் சரிசெய்து கொள்கிறார்கள் என்று கோ.ஃப்மேன் கருத்துத் தெரிவிக்கிறார். ஆனால் பெரும்பாலான சந்தர்ப்பங்களில், சரிசெய்தல் பிந்தையவர்களிடமிருந்து அதிகம். இந்தச் சரிசெய்தல்கள் பல வழிகளில் இருக்கலாம். சமூகத் தொடர்புகளைத் தவிர்க்கலாம். அவனை/அவளை மறைப்பது அல்லது அவனுக்கு/அவளுக்கு துணிச்சல் இருப்பதாக சித்தரித்தல், நிராகரிப்புப் போன்றன சாதாரணமானவர்களைப் போன்று ஏற்றுக்கொள்ளலாகும். எவ்வாறாயினும், கலப்புத் தொடர்புகளின் பெரும்பாலான நிகழ்வுகள் வகைப்படுத்தப்படுவதற்கு வழிவகுக்கின்றன.

இதில் புறக்கணிக்கப்பட்ட நபர் அவன்/அவள் உண்மையில் இருப்பதை விட சிறந்தவர் அல்லது அவளை/அவனை உண்மையில் இருப்பதை விட மோசமானவர் அல்லது புறக்கணிக்கப்பட்ட நபர் முற்றிலும் புறக்கணிக்கப்படுகிறார். தோல்வி என்பது வெளிப்படையாகத் தெரியாத சந்தர்ப்பங்களில், நிச்சயமற்ற தன்மை என்பது சாதாரண மக்களால் ஏற்றுக்கொள்ளப்படுவதைப் பற்றியது அல்ல என விபரிக்கின்றார்.

கோ.ஃப்மேனைப் பொறுத்தவரை (1963), புறக்கணிப்பு என்பது ஒரு பொது அடையாளமாகும், இது மற்றவர்களால் கவனிக்கப்படலாம். இதன் விளைவாக, "அழிவடைந்த அடையாளம்" ஏற்படுகிறது. ஆகவே, சமூகம் அவனுக்கு/அவளுக்கு வகுத்துள்ள நெறிமுறைகளைக் கருத்தில் கொண்டு, எப்படியாவது ஒருவர் முழுமையற்றவர் என்ற எண்ணமே கோ.ஃப்மேனின் புறக்கணிப்பாகும். அழிவடையும் அடையாளத்தின் அவரது வெளிப்பாடு, புறக்கணிப்பு உலகளாவியது என்பதைத் தெளிவுபடுத்துகிறது

தன்னைப் பற்றித் தான் நினைக்கின்ற பண்புகள் அனைத்துமே கெட்டதாகவே எண்ணுகின்ற தன்மையைக் காணலாம். எனவே ஒரு அழிவடைந்த அடையாளம் சில நிபந்தனைகள் அல்லது நடத்தையால் அழிவடைந்த முழு சுயத்தையும் பிரதிபலிக்கிறது (Lewis, 1998). இதனால் புறக்கணிப்பு என்பது ஒருவரைப் பற்றிய அழிவடையும் அடையாளத்தைப் பிரதிபலிக்கிறது. இது அவமானத்தைத் தூண்டுகிறது மற்றும் இந்த அவமானமும் புறக்கணிப்பும், புறக்கணிப்புக் காணப்பட்டாலும் இல்லாவிட்டாலும் அழிவடையும் அடையாளத்தைப் பிரதிபலிக்கும் என்று குறிப்பிடுகின்றார். அந்த வகையில் கோப்மான் குறிப்பிடும் புறக்கணிப்பு அங்கவீனர்களைப் பொறுத்தவரை தினமும் அனுபவிப்பதாகவும் அதிலிருந்து மீண்டு வருவதற்கு அவர்கள் பாடுபடுவதையும் விளக்குகின்றது.

## ஆய்வு முறையியல்

இந்த ஆய்வானது அளவுசார் மற்றும் பண்புசார் முறைமைகளைப் பின்பற்றி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்காக நாற்பது வினாக்கொத்துக்கள் எழுமாற்று அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட மாதிரிகளிடமிருந்து சேகரிக்கப்பட்டுள்ளன. யுத்தத்தினால் அங்கவீனமானவர்களே இங்கு ஆய்வு மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். 25 ஆண்களும் 15 பெண்களும் வினாக்கொத்திற்காகவும் ஐந்து ஆண்கள் மற்றும் ஐந்து பெண்கள் விடய ஆய்விற்காகவும் தெரிவு செய்யப்பட்டுத் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. ஆய்வு மாதிரிகள் அனைவரும் உடல் ரீதியான விசேட தேவைக்குட்பட்டோர் என்பது குறிப்பிடத்தக்கது.

## யுத்தத்தால் பாதிக்கப்பட்ட விசேட தேவைக்குட்பட்டவர்களின் சமூகப்புறக்கணிப்பிற்குப் பின்னால் உள்ள காரணிகள்

உடல் ரீதியாக விசேட தேவைக்குட்பட்டோர் சமூகப் புறக்கணிப்புக்கு உள்ளாகுவதற்குப் பல்வேறு காரணங்கள் காணப்படுகின்றன. சமூக கலாசாரக் காரணங்கள், பொருளாதாரக் காரணங்கள், அரசியல் காரணங்கள் மற்றும் உளவியல் காரணங்கள் என்பனவாகும்.

சமூக-கலாசாரக் காரணங்களை நோக்குகையில் அவை சமூகப்புறக்கணிப்பினை ஏற்படுத்துவதில் அதிக பங்கு வகிக்கின்றன. சமயம், மக்களின் நடைமுறைகள், பழக்கவழக்கங்கள்,

கலை என்பன இவற்றில் செல்வாக்குச் செலுத்துகின்றன. முக்கியமாக, கர்மா என்பது சிறப்பம்சம் பெறுகின்றது. ஒருவன் செய்கின்ற நல்லது மற்றும் கெட்டது என்பது அவனுடைய ஊழ்வினைக்குக் காரணமாகின்றது. அதனால், அவன் மாற்றுத்திறனாளியாக மாற்றமடைகின்றான். ஆய்வுப்பிரதேசத்தில் உள்ள இந்துக்களின் நம்பிக்கையில், மாற்றுத்திறனாளி ஒருவரைக் காணுதல் என்பது அபசகுனமாகப் பார்க்கப்படுகின்றது. கலாசார விழுமியங்கள் மற்றும் நடைமுறைகள் என்பதில், ஒரு நாள் ஆரம்பிக்கின்ற போதோ அல்லது மங்களகரமான நிகழ்வுக்குப் போகின்ற போதோ முதலில் உடல் ரீதியான மாற்றுத்திறனாளி ஒருவரைக் காணுதல் என்பது அபசகுனம் என்பது நம்பிக்கையாகும். இதனாலேயே விசேட தேவைக்குட்பட்டோர் தமக்கு வீட்டை விட்டு வெளியில் வருவதற்கு விருப்பம் இருந்தாலும் வீட்டுக்குள்ளேயே முடங்கி இருக்கின்ற பண்பினைக் காணக்கூடியதாகவுள்ளது. விடய ஆய்வில் ஒரு ஆண் உடல் ரீதியான விசேட தேவைக்குட்பட்டவர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

‘‘நான் பஸ் நிலையத்தில் பேரூந்திற்காகக் காத்திருந்த வேளையில், ஒரு திருமணத்திற்குப் போகின்ற வான் ஒன்று அவ்விடத்திற்கு வந்து அந்நிகழ்விற்குப் போகின்ற அனைவரையும் ஏற்றிக்கொண்டிருந்தனர். அவ்வேளையில் வயது முதிர்ந்த ஓர் அம்மா, ஏன் இந்த நொண்டியன் இந்த நேரத்தில இங்க நிற்கிறனான். இன்றைக்கு என்ர பேரனின்ர திருமணம் நல்லா நடந்த மாதிரித்தான் என்று கூறிவிட்டுச் சென்று விட்டார். ஆனால், நான் ஒரு காலினை இழந்திருந்த போதும் ஊன்று கோலை வைத்து எனது வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறேன் என்பதும் என்னுடைய மனநிலையைப் பற்றிச் சற்றேனும் வருத்தமடையாது என்னை உதாசினப்படுத்தி விட்டுச் சென்று விட்டார்’’.

இத்தகைய செயல்கள் விசேட தேவைக்குட்பட்டோர் சமூகத்தில் கலாசார விழுமியங்கள் மற்றும் மூடநம்பிக்கைகளால் புறக்கணிக்கப்படுவதனைக் காட்டுகின்றது. இவர்கள் தாமாக முன்வந்து சமூகத்துடன் இணைந்து கொள்ள வந்தாலும் சமூகக்கட்டுப்பாடுகளும் மக்களும் அபிவிருத்திச் செயற்பாடுகளில் இருந்து விசேட தேவைக்குட்பட்டோரை ஒதுக்கியே வைத்துள்ளது. ஒரு கட்டுக்கதையாக அல்லது வழியான பின்பற்றலாக விசேட தேவைக்குட்பட்டோர் சமூகத்திற்குத் தேவையற்றவர்கள் மற்றும் மற்றையவர்களுக்குச் சுமையானவர்கள் என்ற எண்ணம் வேரூன்றியுள்ளது. இதனைக் களைவதும் முக்கியமானதாகும்.

உடல் ரீதியான மாற்றுத்திறனாளிகள் *சொத்தி, முடம், குருடன், ஊமை, செவிடன், கூனி* போன்ற வார்த்தைப் பிரயோகங்களைப் பயன்படுத்தியே விழிக்கின்றனர். இதனால், அவர்களின் தனிப்பட்ட ஆளுமை அடையாளம் என்பது இன்றி, அவர்கள் அங்கக் குறைபாட்டை வைத்து மதிப்பிடப்படுகின்றனர். ஆய்வுப்பிரதேசத்தில் 40% வீதமானவர்கள் குடும்ப அங்கத்தினர் பெரும்பாலும் கூட்டுக்குடும்பமாக வசிப்பதனால் தம்மை அதிக அக்கறையுடன் பார்த்துக்கொள்வதாகக் குறிப்பிட்டனர். அதுவும் மாற்றுத்திறனாளிகளைச் செயலற்றவர்களாக ஆக்குவதற்கான முயற்சியாகும். இதனால் சுயமாக இயங்க முடியாதவர்களாகவும், மற்றையவர்களை எல்லாவற்றிற்கும் எதிர்பார்ப்பவர்களாகவும் இவர்கள் மாற்றமடைவார்கள். இது தொழில்சந்தைக்குள் உள்நுழைய விடாமல் அவர்களைத் தடுக்கும். சமூகத்தில் உள்ள ஏனையவர்கள் செய்ய வேண்டியது அவர்களை மேலும் வீட்டுக்குள்ளேயே அடைக்க முற்படாது அவர்களின் தேவைகளை அவர்களே செய்வதற்கான சந்தர்ப்பங்களை உருவாக்குவதுடன், அணுகல் வசதிகளையும் வழங்குவது முக்கியமானதாகும்.

திருமண நிகழ்வு போன்ற விசேட நிகழ்வுகளில் பங்குகொள்வதும் விசேட தேவைக்குட்பட்டோரைப் பொறுத்தவரை பிரச்சினையாகவுள்ளது. திருமணம் போன்ற நிகழ்வுகளுக்கு அபசகுனத்தைக் காரணங்காட்டி அழைப்பு விடுப்பது குறைவாகவே உள்ளது. அங்கு செல்ல வேண்டும் என்ற ஆசை இருந்தாலும் தம்மைத் தவறாக எண்ணி விடுவார்களோ போன்ற காரணங்களால் புறக்கணிப்புக்களை எதிர்நோக்குகின்றனர். பலர் மரியாதைக்குறைவாக நடாத்தப்பட்டமை, திருமணம் மின்தூக்கி வசதியில்லாத மாடி மண்டபங்களில் நடைபெற்றமை போன்றவற்றினால் அவர்களை அதிக கரிசனையுடன் கண்டு கொள்ளாமை போன்றன நடைபெற்றுள்ளன.

இடுப்புக்குக் கீழே இயங்காத மாற்றுத்திறனாளிகள் மேலும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். குறிப்பாகப் பெண்கள் பால்யல் துஷ்பிரயோகங்களை அனுபவிக்கின்றனர். குடும்ப உறுப்பினர்களே அத்தகைய பெண்களுடன் தவறாக நடந்து கொள்கின்ற போக்கினை அவதானிக்க முடிகின்றது. அவர்கள் ஆறுதல் தேடும் குடும்பம் பல சந்தர்ப்பங்களில் மிக மோசமான கடுமையான இடமாகத் தோன்றுகின்றது. அத்துடன், உடல் அங்கவீனம் வந்தவுடன் குறிப்பாகப் பெண்கள் சீதனம் கொடுக்க வேண்டும் என்ற கட்டாயத்தைச் சமூகம் பின்பற்றுகின்றது. இதனால், நாட்பட்ட திருமணங்கள் மற்றும் திருமணம் முடிக்காத தனியாக வாழ்கின்ற அதிக மாற்றுத்திறனாளிகள் காணப்படுகின்றனர்.

உடல் ரீதியான மாற்றுத்திறனாளிகளின் பிள்ளைகள் சிறந்த கல்வியைப் பெற்றுக்கொள்வதிலும் பாரிய சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். பொருளாதார ரீதியில் அவர்களுக்கான சீருடை, புத்தகங்களைப் பெற்றுக்கொள்வதிலும் குடும்பத்தின் வாழ்வாதாரத்தைப் பேணுவதிலும் பின்தங்கி இருப்பதாக உணர்கின்றனர். இதனால் இத்தகைய கொடுமைகளைப் பொறுக்க முடியாது தற்கொலைகள் இடம்பெறுகின்றன. வறுமை, பொருளாதார நெருக்கடிகள், சமூகப்புறக்கணிப்புப் போன்றவற்றிலருந்து விடுபடுவதற்குத் தற்கொலை ஒன்றே சரியான தீர்வாக எண்ணுகின்றனர்.

பொருளாதார மற்றும் உட்கட்டமைப்புக் காரணங்களும் மாற்றுத்திறனாளிகளுக்குச் சமூகப்புறக்கணிப்பு உருவாகுவதில் பங்கு வகிக்கின்றது. இதில் வறுமை, வீட்டு வசதிவாய்ப்புக்கள், மலசலகூட வசதிகள், போக்குவரத்து வசதிகளின்மை, குடிநீர் வளத்தைப் பெறுவதில் சிக்கல்தன்மைகள், பொதுப்போக்குவரத்து அணுகல் வசதியுடன் இல்லாமை, வேலைவாய்ப்பின்மை, போருக்கு முன்னர் மற்றும் பின்னரான தொழிலில் ஏற்பட்ட மாற்றம், குறைந்த சம்பளம் அதிக செலவு, சேமிப்பின்மை, போன்ற பொருளாதார மற்றும் உட்கட்டமைப்புக் காரணங்களால் புறக்கணிப்பு என்பது இலகுவில் விசேட தேவைக்குட்பட்டோருக்கு ஏற்படுகின்றது.

யுத்தத்திற்குப் பின்னர் பலருடைய தொழில் மாற்றமடைந்திருக்கின்றது. முன்னர் தோட்ட வேலை, வயல் வேலை, மேசன், மீன்பிடி, கூலி, போன்ற வேலைகளைச் செய்து கொண்டிருந்தவர்கள் தற்போது யுத்தத்திற்குப் பின்னர், தனியாளாக ஒரே இடத்தில் அமர்ந்து வேலை செய்ய வேண்டிய தேவைப்பாடு ஏற்பட்டுள்ளது. அதுவும் அவர்களால் அதிக நேரம் ஒரே இடத்தில் அமர முடியாதவர்களாகவும் உள்ளனர். குறைந்த மருத்துவ வசதி மற்றும் வறுமை என்பன உடல் அங்கவீனர்களுக்கான சிகிச்சைகளையும் தாமதப்படுத்துகின்றது. வீட்டுடன் சிறுகடை வியாபாரம் போன்றவற்றையே மேற்கொள்கின்றனர் அல்லது பெரும்பாலும் அங்கவீனமுற்ற ஆண்களின் துணைவிகள் வேலைக்குச் செல்கின்றனர். அவர்களுக்கு இது இரட்டை வேலைச்சுமையாக அமைகின்றது. வேலைக்குச் செல்லாத தமது மனைவிமாரை வேலைக்கு அனுப்புகின்றோம், அவர்களாலும் வீட்டு வேலைகளில் பங்குகொள்ள முடியாத நிலை, அவர்களையும் மனைவி தான்

கவனிக்க வேண்டும் போன்ற காரணங்கள் உடல் ரீதியான மாற்றுத்திறனாளிகளை வீட்டிற்குள்ளேயே முடக்குகின்றது.

மாதாந்த குடும்ப வருமானம் என்பது ரூபா 10,000 இனை விடக்குறைவாகவே காணப்படுகின்றது. இதனை வைத்துக் குடும்பச் செலவினையும் பார்த்துக் கொண்டு சுகாதார வைத்திய செலவுகளையும் செய்வது என்பது விசேட தேவைக்குட்பட்டோருக்கு மேலும் சுமையாக உள்ளது. இதனால் வீட்டை விட்டு வெளியே வருவதற்கே அங்கவீனர்கள் அச்சமடைகின்றனர். தேவையற்ற பதட்டம், ஏக்கம், மனச்சோர்வு, மன அழுத்தம், போன்ற உளவியல் ரீதியான தாக்கங்களுக்கு உள்ளாகின்றனர்.

பெரும்பாலான பொதுக் கட்டிடங்கள் சக்கர நாற்காலியைப் பயன்படுத்துபவர்கள் மற்றும் நடமாடும் மாற்றுத்திறனாளிகளால் (கால் மற்றும் கைகளில் அங்கவீனமானவர்கள்) அணுக முடியாதவையாகும். பிரதான அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனக் கட்டடங்கள், கல்விப் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் பொதுக் கட்டிடங்கள் நுழைவாயிலில் படிக்கட்டுகளைக் கொண்டுள்ளன. மேலும் அங்கே மின்தூக்கிகளோ (Lift) அங்கவீனர்களுக்கான மாற்று வழிகளோ இல்லை. உடலில் அங்கக் குறைபாடுகள் உள்ளவர்கள் ஆய்வுப் பகுதியில் பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்துவது சிரமமானதாக உள்ளது. பல வீதிகள் தார் போடப்படவில்லை மற்றும் பெரும்பாலும் மிகவும் சீரற்ற மேற்பரப்புகளைக் கொண்டவையாக இருக்கின்றன. அதனால், உடல் அங்கவீனமானவர்கள் பயன்படுத்தும் கருவிகளைப் பயன்படுத்தி வீதிகளில் நடப்பதும் கேள்விக்குறியாகி உள்ளது.

பேரூந்துசேவை குறைவாகவே காணப்படுகின்றது. இத்தகைய சேவைகள் இருந்தாலும் பல அதனைப் பயன்படுத்துவது கடினமானதாகும். ஏனெனில், இலங்கையைப் பொறுத்தவரையில் இங்கு பாவனையில் உள்ள பேருந்துகள், வாகனங்கள் போன்றவற்றின் நுழைவாயில்கள், உயரமானவையாகவும் குறுகியவையாகவும் காணப்படுகின்றன. இதனால் சக்கர நாற்காலியில் வருபவர்கள் அதனைப் பயன்டுத்த இயலாததாகின்றது. உடல் அங்கவீனமுற்றோர் தங்களது அவசரப் போக்குவரத்து நோக்கங்களுக்காகவும் சுயமாக இயங்குவதற்காகவும் மூன்று சக்கரங்களைப் பயன்படுத்துகின்றனர். அது கூடுதல் செலவாக அவர்களுக்குக் காணப்படுகின்றது. சில மாற்றுத்திறனாளிகள் சைக்கிள், மோட்டார் சைக்கிள், உழவு இயந்திரம், லேண்ட் மாஸ்டர்கள் மற்றும் தனியார் பேருந்துகளைப் பயன்படுத்துகின்றனர்.

மாற்றுத்திறனாளிகளுக்கு வேலைவாய்ப்பு மற்றும் கல்வி வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்வதிலும் கடினமான சூழ்நிலைகளும் கட்டுப்பாடுகளும் காணப்படுகின்றன. உடல் ரீதியாக யுத்தத்தினால் மாற்றுத்திறனாளிகளானவர்கள் பயன்படுத்த வேண்டிய அணுக முடியாத இடங்களாக, வங்கிகள், மத வழிபாட்டுத் தலங்கள், பெரும்பாலான பொதுக் கட்டிடங்களில் உள்ள கழிப்பறை (கொமட் வசதி மற்றும் அங்கவீனர்களுக்கு உகந்த கழிப்பறை வசதிகள் இல்லை), ஹோட்டல்கள், ஓய்வு இல்லங்கள் மற்றும் பாடசாலைகள் போன்றன காணப்படுவதுடன், அவை குறுகிய நுழைவாயில்கள் காரணமாக அணுக முடியாதவைகளாகக் காணப்படுகின்றன. பொருத்துதல்களின் அமைப்பு பெரும்பாலான நகர்ப்புற வேலையிடங்கள், கல்வி மற்றும் நிறுவனங்கள் மற்றும் பொதுக் கட்டிடங்கள் நுழைவாயிலில் படிகள் உள்ளன. பெரும்பாலும் பல அடுக்குகள் மற்றும் எப்போதும் மின்தூக்கிகளைக் கொண்டிருக்காது (இலங்கைக்கான மாற்றுத்திறனாளிகளின் தேசியக் கொள்கை, 2003).

மாற்றுத்திறனாளிகளின் வீட்டின் அமைப்புக்களும் அவர்களின் வாழ்வியலுக்கு உகந்ததாக இல்லை. இங்கு இருக்கின்ற விசேட தேவைக்குட்பட்டோர் தாழ்வகுப்பினைச் சேர்ந்தவர்களாக

உள்ளனர். அவர்களின் வீடுகள் சாதாரண மக்கள் பயன்படுத்துவதற்கே கடினமானதாக உள்ளன. வீட்டின் அமைப்பு, கழிவறைகள், மலசலகூடம், குளியலறைகள் போன்றன அணுகல் வசதியற்றவையாக உள்ளன. எனவே எல்லா நேரங்களிலும் விசேட தேவைக்குட்பட்டவர் ஒருவர் அருகில் இருந்து உதவி செய்த வண்ணமே இருக்க வேண்டும். மலசல கூடங்கள் வீட்டிலிருந்து தொலைவில் இருப்பதால் அவற்றை அணுகுவதற்கே அவர்கள் உதவியை நாட வேண்டியுள்ளது. மின்சார மற்றும் நீர்க்குழாய் வசதியற்ற இடங்களாகக் காணப்படுகின்றன.

விசேட தேவைக்குட்பட்டவர் இருக்கின்ற இடங்கள் எப்பொழுதும் சுத்தமாக இருக்க வேண்டும். அதுவும் இடுப்பிற்குக் கீழே இயக்கம் இல்லாதவர்களின் இடங்கள் சுத்தமாகப் பேணப்படல் வேண்டும். அதற்கு ஒரு துணை எந்நேரமும் அவர்களுடன் இருக்க வேண்டும். அதனாலும் அங்கவீனர்களைக் கவனித்துக் கொள்ளும் செலவு அதிகரிக்கின்றது. அதுவும் குற்றவுணர்வு, மற்றையவர்களைச் சந்திப்பதில், அவர்களுடன் கதைப்பதில் விருப்பமின்மையையும் பின்னடைவினையும் அங்கவீனர்களுக்கு ஏற்படுத்துகின்றது (நேரடி அவதானம், கள ஆய்வு, 2014).

அரசியல் காரணங்களும் விசேட தேவைக்குட்பட்டவர்களின் சமூகப்புறக்கணிப்பிற்குக் காரணமாகின்றது. இலங்கையில் காணப்படும் சட்டங்கள் எல்லா மனிதர்களையும் சமமாகக் கருதப்படல் வேண்டும் என்ற வரையறையினை வழங்குகின்றது. ஆனால், அதனை நடைமுறைப்படுத்துபவர்களும் சமூகமும் விசேட தேவைக்குட்பட்டவர்களை வேற்று உலகத்தவர்களாகவும் எந்த விதமான முன்னேற்றங்களுக்கும் பயன்படாதவர்கள் என்றும் காலங்காலமாக சொல்லப்பட்டுக் கொண்டு வருகின்றது. அதனால் பரம்பரைகளுக்கு விசேட தேவையுடையோர் பற்றிய தவறான கருத்தியலானது கடத்தப்படுகின்றது. அதனால், விசேட தேவையுடையோரின் சுய புறக்கணிப்பு, சமூகப் புறக்கணிப்பு போன்றவற்றினால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர்.

இலங்கையானது, மார்ச் 30, 2007 அன்று CRPD உடன்படிக்கையில் கையெழுத்திட்டது. ஆனால் இன்னும் அதனை அங்கீகரிக்கவில்லை. 1978 ஆம் ஆண்டின் அரசியலமைப்பின் 12வது பிரிவு சமத்துவத்திற்கான உரிமையை வழங்குகிறது. அத்துடன், 12(4) பிரிவு பெண்கள், குழந்தைகள் அல்லது விசேட தேவையுடையோரின் முன்னேற்றத்தைத் தடுக்க எந்தச் சட்டத்தையும் உருவாக்க முடியாது என்றும் எடுத்துரைக்கின்றது.

2003ஆம் ஆண்டின் 33 ஆம் எண் சட்டத்தால் திருத்தப்பட்ட மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் சட்டம் (எண். 28 1996) அங்கவீன நபர்களுக்கான பாதுகாப்புக் குறித்த சட்ட விதிகளை வழங்குகிறது. மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளை மேம்படுத்துதல், முன்னேற்றம் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, "விசேட தேவைக்குட்பட்டோருக்கான நபர்களுக்கான தேசிய சபை" நிறுவப்பட்டது. இது மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய செயலகத்தை நியமிப்பதற்கான ஏற்பாடுகளை வழங்குகிறது. இதனுடன் தொடர்புடைய தன்னார்வத் தொண்டு நிறுவனங்களைப் பதிவு செய்வதையும் கையாள்கிறது. மேலே உள்ள சட்டம், அங்கவீனமான நபரை, அவரது உடல் அல்லது மனத் திறன்களில் ஏதேனும் குறைபாட்டின் விளைவாக, பிறவி அல்லது இல்லாவிட்டாலும், இயலாத நபராக வரையறுக்கிறது.

வாக்களிக்கின்ற உரிமை, அரசியல் தலைவர்களைத் தெரிவு செய்வதற்கான உரிமை மற்றும் அரசியல்வாதியாக வாக்குக் கேட்கும் உரிமை என்பன சட்ட ரீதியாக இருந்தாலும் அதனை நடைமுறைப்படுத்துவதும் பிரயோகப்படுத்துவதும் கடினமானதாக உள்ளது. சமூகத்தில்

உள்ளவர்களே மாற்றுத்திறனாளிகளை ஊக்கப்படுத்தாமல் அவர்களின் ஆசைகளை, கனவுகளைச் சிதைக்க முற்படுகின்றனர். உடலில் அங்கக் குறைபாடுகளை வைத்துக் கொண்டு எவ்வாறு ஆட்சி புரிவது, இதில் சட்டத்தில் இடம் இருக்கின்றதா என்று பார்க்க வேண்டும் போன்ற காரணங்களைக் கூறி மாற்றுத்திறகாளிகள் அரசியலுக்குள் நுழைவதைத் தடுக்கின்றனர். இவ்வாறான சந்தர்ப்பங்கள் வருகின்ற போது அரசியல் ரீதியான சமூகப்புறக்கணிப்புக்களை மாற்றுத்திறனாளிகள் எதிர்கொள்கின்றனர்.

தேர்தல் காலங்களில் மட்டுமே தமக்கான விசேட வாகனங்கள் அனுப்பி வாக்களிக்க வைப்பதற்காக மட்டுமே வீடு வீடாக அரசியல்வாதிகள் வருவார்கள். பல்வேறு வகைப்பட்ட கொள்கைகள், அங்கவீனர்களுக்கான பொருளாதார முன்னேற்றங்கள் போன்ற தேர்தல் பிரச்சாரங்களை முன்வைப்பார்கள். ஏனைய நாட்களில் அவர்களைக் காண முடிவதில்லை என்று விசேட தேவைக்குட்பட்டோர் அங்கலாய்க்கின்றனர்.

அரசாங்கம் பல்வேறுபட்ட கொள்கைகளைப் பிரத்தியேகமாக விசேட தேவைக்குட்பட்டவர்களுக்கு உருவாக்கியுள்ளது. எனினும், அத்தகைய வரப்பிரசாதங்கள் பற்றிய தகவல்கள் அவர்களுக்குப் போய்ச் சேருவதில்லை. பெரும்பாலான அரச ஊழியர்களோ ஏனையவர்களோ இதனைப் பற்றிய விழிப்புணர்வுகளை ஊட்டுவதில்லை. பெரும்பாலான ஊழியர்களுக்கே அதனைப் பற்றிய பூரண தகவல்கள் தெரியாது. இத்தகைய தடைகள் விசேட தேவைக்குட்பட்டவர்களை வீட்டை விட்டு வெளியில் கொண்டு வருவதில் சிக்கல்களை உருவாக்கியுள்ளது.

பொது ஆணைக்குழுச் சுற்றறிக்கையானது இருக்கின்ற வேலைவாய்ப்புக்களில் 3%மானது விசேட தேவைக்குட்பட்டவர்களுக்கு ஒதுக்கப்படல் வேண்டும் என்று குறிப்பிடுகின்றது. ஆனால் நிஜ உலகில் விசேட தேவையுடையவர்களை வேலைக்கு எடுப்பதற்கு அரச நிறுவனத்தில் பணிபுரிபவர்கள் தயங்குகின்றனர். கல்வியினைப் பொறுத்தவரையில் கூட விரும்பிய துறையினைக் கற்றுக் கொள்வதும் இயலாததாகவே உள்ளது. விஞ்ஞானம், மருத்துவம் போன்ற துறைகளில் கற்றலை மேற்கொள்வதற்கு இலங்கையில் மாற்றுத்திறனாளிகள் போராட வேண்டியுள்ளது. அதற்கான சுற்றறிக்கைகளும் இங்கு இல்லை. அதனால் தமக்கான தகைமைகளைப் பெற்று உயர் பதவிகளை அடைதல், தமது கனவுகளை நோக்கிச் செல்லுதல் என்பது அங்கவீனர்களுக்கு முன்னாலுள்ள சவால்களாகும். இதனைத் தாண்டி வெளியில் வந்தாலும் சமூகம் விசேட தேவையுடையோரைப் புறக்கணிப்பதிலேயே குறியாக உள்ளது.

இவ்வாறாக விசேட தேவையுடையோர் சமூக-கலாசார, பொருளாதார, அரசியல் ரீதியான, சுகாதார ரீதியான காரணங்களால் சமூகப்புறக்கணிப்புக்களை அனுபவிக்கின்றனர்.

## முடிவுரை

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட விசேட தேவையுடையவர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் பிறப்பினால் மாற்றுத்திறனாளிகள் ஆனவர்களல்ல. அவர்கள் தமது வாழ்க்கையினை ஏனைய மனிதர்களைப் போன்று வாழ்ந்து இடைநடுவில் தமது வாழ்வின் போக்கினை முற்றுமுழுதாகப் புதியதொரு நோக்கில் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள். திடீரென்று அங்கத்தை இழப்பது அல்லது செயலிழப்பது என்பது மிகப்பாரிய மன அதிர்ச்சியினை ஏற்படுத்தும். அதிலிருந்து மீண்டு அவர்கள் தமக்கான வாழ்வை ஊக்கத்துடன் தொடங்குகின்ற போது சமூகத்தில் இருக்கின்ற ஏனைய

மக்கள் உறுதுணையாக இருத்தல் வேண்டும். ஆனால், இலங்கையில் விசேட தேவைக்குட்பட்டோர் அபசகுனமாகவும், கலாசார ரீதியில் தீண்டத்தகாதவர்களாகவும், மூடநம்பிக்கைக்குள் வைத்துப் பார்க்கப்படுகின்றனர். அத்துடன், பொதுக் கட்டடங்களிலிருந்து பொதுப் போக்குவரத்து வரை அனைத்தும் அணுகல் வசதிகளற்றவையாகக் காணப்படுகின்றன. கல்வியில் புறக்கணிப்பு, வேலை வாய்ப்பில் புறக்கணிப்பு என்பன விசேட தேவைக்குட்பட்டவர்களின் வருமானம், வாழ்க்கைச் செலவு போன்றவற்றில் எதிர்மறையான தாக்கங்களைச் செலுத்துகின்றன. இயலுமை இருந்தும் இயலாதவர்களாகவும் இன்னொருவரின் துணையுடன் குடும்பத்தைப் பார்க்க முடியாதாவர்களாக வாழ்கின்றனர். அதற்கு இலங்கையின் உட்கட்டமைப்பு வசதிகள், மருத்துவக் கருவிகள் கிடைத்தும் பயன்படுத்த முடியாத போக்குவரத்து வீதிகள், கட்டடங்கள் போன்றனவும் விசேட தேவைக்குட்பட்டவர்களின் சமூகப்புறக்கணிப்பிற்கான காரணங்களாகின்றன.

## பரிந்துரைகள்

சமூகமயமாக்கல் ஊடாக இனி வருகின்ற வருங்கால சந்ததியினர் விசேட தேவைக்குட்பட்டவர்களையும் சாதாரண மக்களாக எண்ணுகின்ற தன்மையினை உருவாக்க வேண்டும். இலங்கையையும் வெளிநாட்டினரையும் ஒப்பிட்டு நோக்குகையில், அணுகல் வசதி என்பது இலங்கையின் மாற்றுத்திறனாளிகளின் புறக்கணிப்பிற்கு மிக முக்கியமான காரணியாகும். எனவே, அணுகல் வசதிகளை வழங்க வேண்டியதும் ஏற்படுத்த வேண்டியதும் அவசியமாகின்றது. அரசும் ஏனைய நிறுவனங்களும் மக்களும் இதற்கான ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும்.

விசேட தேவைக்குட்பட்டவர்களும் இணைந்தது தான் சமூகக் கட்டமைப்பு என்கின்ற புரிதலின் அடிப்படையில் வேலை வாய்ப்புக்களை வழங்கல், கல்விக்கான வாய்ப்புக்களை வழங்கல் என்பவற்றின் மூலம் அங்கவீனர்களையும் அபிவிருத்திச் செயற்பாடுகளில் உள்ளீர்த்துச் சமூகத்தின் அங்கத்தவர்களாக அங்கீகரிக்க வேண்டும்.

## உசாத்துணை நூல்கள்


- Annual Performance Report and Accounts, (2012), Mullaitivu District: Mullaitivu Divisional Secretariat Office.
- American Psychological Association (September, 2009). APA Referencing Guide. Retrieved May 2014, from http://www.waikato.ac.nz/library/study/guide.apa.shtml Arjan et al., (2012).
- Stigma: Advances in theory and research. Basic and Applied social psychology. The Netherlands: Open University, School of psychology.
- Byrne, P. (2000). Stigma of mental illness and ways of diminishing it Advances in Psychiatric Treatment. Vol.6 (1), pp. 65-72.
- Central Bank of Sri Lanka. (2012). Economic of Sri Lanka. Colombo: Statistical Department, Sri Lanka.
- Costs of War. (2001). Colombo, Sri Lanka: National Peace Council.
- Department of Social Services profile. (2011). Sri Lanka: Department of Social Services.

- Link, B.G. & Phelan, J.C. (2001). Conceptualizing stigma. Annual Review of Sociology, vol.27, pp.363-385.
- Disability Rights Task Force (1999) From Exclusion to Inclusion: Final Report of the Disability Rights Task Force. Retrieved 19 may, 2014, from http://www.disability.gov.uk.
- Disabled childcare & Child poverty. (2007). London: Every Disabled Child Poverty (EDCM).
- Goffman, E. (1963). Stigma: Notes on the management of a spoiled identity. Englewood Cliffs, NJ: Prentice Hall.
- Gunawardena, N. (2010). Narrative experience of Disabled veterances in post-war in Sri Lanka. Leeds: University of Leeds.
- Hewstone, M. (2003). Inter-group contact: Panacea for prejudice? The Psychologist, 12, pp.352-355.
- Horton, B.P & Leslie, G.R. (1981). The sociology of social problems. (7th ed.). Englewood Cliffs, U.S.A, Prentice Hall Inc.
- ILO. (2010). Increasing the Employability of Disadvantaged Youth: Responding To the Impact of the Financial and Economic Crisis. ILO: Geneve August 2010.
- ILO. (2004). Country report about China's youth employment. Retrieved 2014, from: http://www.ilo.org/public/english/region/asro/tokyo/conf/2004youth/downloads/china .pdf.
- Land Branch Divisional Secretariat report. (2012), Mullaitivu District: Maritimepattu DS Dvision.
- Lebbe, P.S.S. (2007). Right to Development for disabled people. Colombo: University of Colombo.
- Lewis, J. (1998). Experiencing HIV as a Status Passage. Paper presented at American Sociological Association (ASA) Annual Association Conference.
- Link, B.G. & Phelan, J.C. (2001). Conceptualizing stigma. Annual Review of Sociology, 27, pp.363-385.
- Maritimepattu DS Profile. (2012). Mullaitivu District: Maritimepattu DS Office.
- Miller, C.T. & Kaiser, C.R. (2001). A theoretical perspective on coping with stigma. Journal of Social Issues, 57, pp.73-92.
- Ministry of Labour Relations and Manpower. (2009). Labour and Social Trends in Sri Lanka. Colombo: Ministry of Labour Relations and Manpower.
- Naami et al., (2012). Crudo, D (eds) Retreived August 20, 2014, from http://www.naami.org/namion campus.html.
- National Policy on Disability for Sri Lanka. (May 2003). Sethsiripaya, Battaramulla, Sri Lanka: Ministry of Welfare.

- Protection of the Rights of Persons with disabilities. (1996). Parliament of Sri Lanka, Sri Lanka.Retrived 2014 from. www.commonlii.org/...act/potropwda28o199659...
- Saddhanada, K.W.S. (2004). Analysis of Disability Statistics in Sri Lanka-2001. Colombo: Department of Census and Statitistics, Sri Lanka.
- Samankelegama. (2010). Recontruction & rehabilitation in the north east of Sri Lanka. Economic Review, 35, pp.24-31.
- Scambler, G. (1987). Sociological theory and medical sociology. New York: In Association with metheun INC.
- Sriwardena et al. (2012). Doc Call: a mobile phone based medical advice service to accommodate health care unmet needs in Sri Lanka. Sri Lanka Journal of Bio-Medical Informatics 3(4):144-149.
- *Statistical Hand Book of Maritimepattu*. (2012). Mullaitivu District: Maritimepatu DS Division.
- *Statistical Information of District Secretariat Office*. (2012). Mullaitivu District: District Secretariat Office.
- Strategies and action plans. (2010). National Strategy on TVET provision for Vulnerable people in Sri Lanka. Colombo: Development of the National strategies and Action plans.
- Wiley, Norbert. (2006). The Semiotic Self. Chicago: University of Chicago Press.
- Wickramanayake, T. (7September, 2013). Legal commission: Rights of Persons with Disabilities. Retrieved3 March, 2014, from. www.dailynews.lk/?q=police-legal/legal-aid.
- WHO. (1994). General research protocol for the study of the determinants of HIV and AIDS-related discrimination, stigmatization and denial in developing countries. Geneva, World Health Organization Global Programme on AIDS, Social and Behavioural Studies and Support Unit.
- World Health Organization and World Bank. (2011). World Report on Disability. WHO:Geneva. Retrieved2014,from.http://whqlibdoc.who.int/publications/2011/9789240685215_eng.pdf.